www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

சித்திரை 2001 | இதழ் 25

''இங்க இருக்கிற எங்கட சனங்களெல்லாம் ஒற்றுமையா ஓர்மத்தோட ரோட்டில இறங்கி ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என்றெல்லாம் நடத்தினா, அதுவே இந்த போராட்டத்தில பெரிய மாறத்த ஏற்படுத்தும்''

ஈழ அகதிப் பெண்
தமிழக அகதிமுகாம்

# அரசியல் பேச்சுவார்த்தைகளினூடாகவும் தீர்வு தமிழீழக் குடியரசே!



சாம்ராஜ்யங்களின் கொடு மன்னர்கள் துூர இருக்கும் சின்னஞ்சிறு மக்கள் கூட்டங்களுக்கு துாதுவிட்டார்கள். தமக்குக் கப்பம் கட்ட மறுத்தால் உங்களை அழித்தொழித்து விடுவோம் என்றார்கள். அந்த சாம்ராஜ்யங்கள் பின்னர் ஒவ்வொன்றாக சரிந்து விட்டன. சாம்ராஜ்யங்கள் என்றாலே அவை சரிந்து விழ்வதற்கு விதிக்கப்பட்டவைதான்.

இன்று இந்த நவீன காலத்தில், அமெரிக்க ஏகாதிபத்திய அரசு தனது துாதுவராக திருவாளர் வில்ஸ் என்பவரை நமது மண்ணுக்கு அனுப்பியுள்ளது. ஐம்பது வருடமாக தமது அரசியல் உரிமைகளுக்காகவும் இருப்பிற்காகவும் போராடிக் கொண்டிருக்கும் ஒரு தேசத்தை மிரட்டிப்பணிய வைக்கும்படி துாதனுப்பியுள்ளது. சிறிலங்கா அரசின் ஆசீர்வாதத்துடன் வந்து, அளிக்கப்பட்ட விருந்துகளை உண்டு தினவெடுத்து, நமது கடல்களில் குளித்து இளைப்பாறி பின்னர் தனது அரசியல் அச்சுறுத்தலை அவர் விடுத்துள்ளார். வெள்ளைமாளிகை இட்ட கட்டளையை பிசகின்றி நிறைவேற்றி சிங்கள அரசுக்கும் சிங்களச் சோவினிஸ்டுகளுக்கும் ஊக்கம் கொடுத்துள்ளதுடன் இந்திய மத்திய அரசையும் திருப்தி செய்துள்ளார்.

அமெரிக்க அரசு சிறிலங்கா அரசுக்கு இராணுவப் பயிற்சிகள், விசேட கடற்படைப் பயிற்சிகள் தொடக்கம் இன்னும் பல்வேறு உதவிகளையும் கடனாகவும் இலவசமாகவும் வழங்கிக் கொண்டு இச்செய்தியை நமக்கு விடுத்துள்ளது. இருந்தும் ஏன் அல்லது எதற்காக தமிழீழம் சாத்தியப்படாது, என அவரும் அவரது அரசும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. இவர் மாத்திரமல்ல, இந் நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள எந்த அரசும் இதுபற்றி வாய்திறப்பதில்லை.

### ஏன் இந்த முரண் அணுகுமுறை?

யுத்தம் மூலமாக தமிழீழம் அமைப்பது என்பது எமது மக்களின் தெரிவு அல்ல, விருப்பத்துடன் தேர்ந்து கொண்ட வழிமுறையும் அல்ல. அது தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தம். எம்மீது வலிந்து திணிக்கப்பட்டது. இந்த வரலாறு முழுவதும் அமெரிக்க அரசுக்கும் ஐரோப்பிய அரசுகளுக்கும் தெரியாமலில்லை. இந்த அரசுகள் யாவும் அங்கம் வகிக்கும் தேசங்களின் ஒன்றியத்தில் (ஐ.நாவில்), தேசங்களின் சுயநிர்ண உரிமை என்ற உன்னத அரசியல் நெறியை தாமே அறிமுகம் செய்வதாகவும், அதனைக் காப்பாற்றி வருவதாகவும் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள். ஆனால், நமது மக்கள் தம் சுயநிர்ணய உரிமையின் பாட்பட்டு, சட்டபூர்வமாக 1977 இல் சர்வஜன வாக்கெடுப்பில் எடுத்துக்காட்டிய அரசியல் உண்மையை இவர்கள் மறுத்துரைப்பதன் நியாயம்தான் என்ன?

இப்போதும் கூட இந்த இருபத்தைந்து வருடங்கள் இரத்தம் சிந்திப்பெற்ற அனுபவங்களுக்குப் பின், இதே உரிமையை, சுயநிர்ணய உரிமையை மீண்டும் நமது மக்கள் வலியுறுத்த விழையும் போது, வீதிகளில் இறங்கி வெளிப்படுத்த முனைந்த போது, கையெழுத்துக்களாகத் திரட்ட முனைந்த போது, அதனை இராணுவ கொடுரம் கொண்டு சிறிலங்கா அரசு அடக்குவ-

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## விடியல்: முஸ்லிம் தேசத்தின் சுயநிர்ணயத்திற்கான அரசியல் ஏடு

வடக்கு - கிழக்கு பிரதேசத்தை தமது தாயகமாகக் கொண்டுள்ள முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுக்கும் முஸ்லிம்களுக்கான முதல் அரசியல் ஏடாக விடியல் வெளிவந்துள்ளது.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களை ஒரு தனித் தேசமாக அடையாளப்படுத்தல், முஸ்லிம் தேசத்தின் சுயநிர்ணயம், அரசியல் உரிமை சாந்து கருத்துகளை விடியல் முன்வைத்து வருகிறது. முஸ்லிம் தேசம் தன்னை திட்டவட்டமான அரசியல் இலக்குடன் கூடிய சமூகமாக கட்டியெழுப்புவதற்கான அடிப்படை அரசியல் விழிப்புணர்வு மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்திடும் விடியலின் வருகை இன்று சிங்கள மற்றும் தமிழ் இனவெறி போக்குகளுக் கெதிராக போராடிக் கொண்டிருக்கும் முஸ்லிம் தேசத்திற்கான காலத்தின் தேவையாயுள்ளது.

முஸ்லிம் தேசத்தின் அரசியல் சஞ்சிகையான விடியலை தேசமாக நாமும் வாழ்த்தி வரவேற்போம்.

# அன்னை பூபதியை நினைவு கூர்வோம்!



தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த இந்தியப் படைகளின் அட்டுழியங்களால் தமிழீழத்தின் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டு வந்த துன்பங்கள், அந்நியப்படைகளால் நம் பெண்கள் அனுபவித்த சித்திரவதைகள் மனித உணர்வுடைய எந்த இதயத்தையும் தீய்ப்பதாயிருந்தது.

இந்நிலைக்கு முடிவுகட்டப்பட வேண்டும், நமது மக்கள் சுதந்திரமாக வாழும் நிலை உருவாக வேண்டும் எனும் தீரா வேட்கையுடன், பெண்களின் கூட்டான சமூக தலைமைத்துவத்திற்கும் ஆளுமைக்கும் குறியீடாகத் திகழ்ந்த மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளர்களான அன்னை பூபதியும் சக பெண்கள் இருவரும் உண்ணாவிரதத்தின் மூலம் தமது எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். 30 நாட்கள் தனது தளரா உறுதியினால் தன்னையே உருக்கி தன்னுயிர் நீத்தார் அன்னை பூபதி.

தமிழீழ பெண்களின், தமிழீழ தாய்மாரின் வீரத்தினதும். போர்க்குணாம்சத்தினதும், மனவலிமையினதும் குறியீடாகத் திகழும் அன்னை பூபதியின் 13வது நினைவு தினத்தில் தேசமாக அவரை பெருமதிப்புடன் நினைவு கூர்வோம்.

சிங்கள இனவெறிப் படைகளினால் நமது தேசத்துப் பெண்கள் அடக்குமுறைகளை எதிர்கொண்டுவரும் இச்சூழலில் அன்னை பூபதியின் நினைவுகள் நமக்கு மென்மேலும் துணிவையும் மனத்திடத்தையும் ஏற்படுத்தட்டும். நம் தேசத்துப் பெண்கள் தமக்குள் உள்ளார்ந்திருக்கும் வலிமையைத் திரட்டி நமது எதிரிகளை நம்மண்ணில் தோற்கடிப்போம். பெண்களின் சுதந்திரத்தை உறுதிபடுத்துவோம். இதுவே அன்னை பூபதிக்கும் நம் தேசத்தின் பெண் தியாகிகளாக சுடரும் வீராங்கனைகளுக்கும் நாம் செலுத்தும் உயர்வான அஞ்சலியாகும்.

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# புதிய சூழலுக்கேற்ற புதிய போராட்ட வடிவங்கள்

**சி**றிலங்கா அரசின் கீழ் நமது மக்களின் தேசிய இருப்பு, உயிர்வாழும் உரிமை உட்பட அடிப்படை உரிமைகள் எவற்றுக்கும் இடமில்லை என்பதோடு சிறிலங்கா அரசுக்கட்டமைப்பின் கீழ் தேசங்களின் சக வாழ்வு என்பது சாத்தியமில்லை என்பதும் இந்த ஐம்பது வருட கால அனுபவத்தில் நிருபிக்கப்பட்டுவிட்டது. இருந்தும் ஒன்றாக வாழுமாறும் இன்று எம்மை நிர்ப்பந்திப்பது யார்? ஏற்கனவே நமக்குத் தெரிந்த சிறிலங்கா அரசை விட, தற்போது ஏகாதிபத்திய அரசுகளும் இந்திய பிராந்திய ஆதிக்க அரசும்.

சிறிலங்கா அரசினைப் பாதுகாக்க படை கொண்டோ, படை கொள்ளாமாலோ நம் தேசத்துடன் பொருதிக் கொண்டிருப்பது இந்த ஆதிக்க அரசுகள்தான். இனிவரும் நமது விடுதலைப் போராட்டக் காலங்களானது ஏகாதிபத்திய, இந்திய எதிர்ப்புப் போராட்ட கால கட்டம் ஆகும்.

ஐரோப்பியர் நம்மை ஆக்கிரமிக்க முன்னர் நமது மண்ணில் மன்னராட்சிகள் நிலவியது. அப்போதெல்லாம் பெரும்பாலான மக்கள் தம்மை ஆள்வது இந்த மன்னரா அல்லது அந்த மன்னரா அல்லது கலப்பு மன்னரா என்பது பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. காரணம் அந்த ஆட்சிக்காலங்களில், விவசாய சமூகங்களில் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு ஆட்சிமுறையிலும், அதன் அதிகார நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளிலும் பங்கில்லை. படைகளுக்கு ஆட்களில் ஒருபகுதி போக, பலவந்தத்தின் காரணமாகவோ அன்றியோ வரிகளைக் கொடுத்து விட்டு எஞ்சியோர் தமது அன்றாடப் பணிகளில் ஈடுபட்டு விடுவார்கள். மன்னர் மற்றும் அவர்களைச் சுற்றியிருந்தவர்களின் கலாச்சாரங்களும் மாக்கள் எனப்படும் குடிமக்களில் மிகப் பெரும்பாலான மக்களின் கலாச்சாரங்களும் முற்றிலும் வேறுபட்டவை. இரண்டுமே கலந்து விடக்கூடாதென்பதில் மன்னர்களும் அவர் தம் குழாமும் மிகவும் கவனமாகவே இருந்து வந்துள்ளனர். இது அந்தக் காலம்.

அடுத்து வந்த ஐரோப்பிய காலகட்டம். அவர்களின் ஆட்சிமுறை காரணமாக ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் பற்றி அறிவோம். 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், ஆங்கிலேயர் இந்த நாட்டிலிருந்து வெளியேறச் சற்று முன்னைய காலத்தில் தமிழருக்குத் தனிநாடு வேண்டும். தமக்கென ஒரு அரசு வேண்டும் என்ற கோரிக்கைகள் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழ் மேட்டுக்குடியாட்களின் நலன்சார் கோரிக்கையாக இது அமைந்தது. எனவே பரந்துபட்ட மக்களுக்கு இந்த கோரிக்கை தொடர்பாக பெரியளவில் அக்கறை இருக்கவில்லை. அக்கோரிக்கை பரந்து பட்ட நம் மக்களின் அரசியல், பொருளாதார,சமூக நலன்களை மிக மிக சிறியளவிலேயே பிரதிபலித்தது. இது நடைபெற்றது இடைப்பட்ட காலம்.

இப்போது நவீன காலம். மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்றுவிட்ட காலம். தேசியப் பிரக்ஞை அனைவரையும் ஆட்டுகொண்டுள்ள காலம். பொதுவில், ஐம்பதுகளின் தொடக்கத்தில் மொழிஉரிமை, நிர்வாக அதிகார உரிமை, காணி அதிகாரம் எனக் கோரி, பின் எழுபதுகளின் நடுப்பகுதியில் நமக்கென தனியாக அரசு வேண்டும். அது **தமிழீழ சுதந்திரக் குடியரசாக** வேண்டும் என்ற அரசியல் பிரக்ஞை நம்



மக்களில் மிகப் பெரும்பாலாரைப் பற்றிக்கொண்டது. அது பெருமளவு தமிழ் மக்களின் உணர்வுகளிலும் நலன்களுடனும் கலந்து விட்ட ஒன்றானது.

சிங்கள அரசின் கீழ் நமது மக்கள் சுதந்திரமான பிரஜைகளாக வாழ்வது முடியாததாகிப் போயிற்று, எனவே அனைத்து விதத்திலும் தனித்துப் போய்விடுவது தவிர மார்க்கம் வேறில்லை என்பது தெள்ளத் தெளிவானது. அது நம் தேசத்தின் அரசியல் முடிவாக சட்டபூர்வமான 1977 தேர்தலில் சர்வசன வாக்கடுப்பாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டு விட்டது. ஆனாலும் தமிழீழத்தை எப்படிப் பெறுவது?.... மக்களில் பெரும்பாலானவர்கள் தமது உள்ளார்ந்த இந்த அரசியல் விருப்பினை, அதிக இழப்புகளை அடைந்து பெறுவதைவிட இழப்புகள் குறைந்த வழிமுறையாக பாராளுமன்ற முறைகளைப் பயன்படுத்துதல், சட்டபூர்வ வழிமுறைகளில் வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடுதல், தமிழீழத்திற்கான சர்வதேச ஆதரவுகளை திரட்டுதல் போன்றவற்றின் மூலமாக பெற்றுவிடுவதில் அதிகமான மக்கள் கரிசனை கொண்டிருந்தனர்.

நமது சட்டபூர்வ கோரிக்கைகளும் வழிமுறைகளும் சிறிலங்கா அரசினால் தடைசெய்யப்பட்டன. நம் மீது யுத்தம் திணிக்கப்பட்டது. நம் மண்ணில் மூலை முடுக்கெங்கும் சிங்கள ஆக்கிரமிப்புப் படை நிறுத்தப்பட்டது. அப்போதும் கூட ஆயுதப்போராட்ட வழிமுறை மீது அதிக மக்கள் ஆர்வம் கொள்ளவில்லை. அதனை அழுத்தம் கொடுக்கும், எதிர்ப்புகளைக் காட்டும் ஒரு வழிமுறை என்ற அளவில் சம்மதத்தை தெரிவித்துக் கொண்டனர். இளைஞர்கள் சிலர் ஆயுதப் போராட்ட வழிமுறையில் உறுதியான நம்பிக்கை கொண்டு ஆரம்பத் தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தனர்.

இக் காலப் பகுதிகளில்தான், அண்ணன் மார்கள் அன்றைய அரசுடன் கூடிக்குலாவிக் கொண்டு, தம்பிமார்கள் அவசரப்படுகின்றார்கள் என அரசியல் போதனை செய்து கொண்டிருக்க முடிந்தது. இப்படி ஒரு பத்து வருடங்கள் போயிற்று. அதன் பின்பு நிலைமைகள் தலைகீழாக மாறியது. அதுவும் ஒரு தனியான வரலாறு.

இன்றைய காலகட்டத்திற்கு வருவோம் எனின், **இப்போதும்** நமது மக்களுக்குத் **தமிழீழம் தான் வேண்டும்.** அடக்குமுறைகளையும் இனஅழிப்பையும் ஆட்சிமுறையாகக் கொண்ட சிறிலங்கா அரசின் பிரஜைகளாக ஒரு போதும் தமிழர்களாகிய நாம் வாழ்வது சாத்தியமில்லை என்பது மிகத் தெளிவான உண்மை. அது மாத்திரமன்றி ஆயுதம் ஏந்தா வழிமுறைகள் என்பது அர்த்தமற்றது என்ற உண்மையும் தெள்ளத்தெளிவாகி விட்டது. அரசியல் மொழிகள் புரியாத எதிரிக்கும் நம்மீது அழித்தொழிப்புப் போரை நடாத்திக் கொண்டிருக்கும் சிங்கள இனவாத அரசுக்கு புரியக்கூடிய மொழியாக ஆயுதப் போராட்டம் மாறி, வளர்ந்து வியாபித்து இறுதியாக ஆயுதப் படைகளின் முள்ளந்தண்டும் முறிக்கப்பட்டு விட்டது. இந்தப் போராட்டம் முழுவதும் நமது மக்களின் எண்ணற்ற கண்ணுக்குப் புலப்பட்ட, புலப்படாத பங்களிப்புகளும் அர்ப்பணிப்புகளும் கலந்திருப்பது தனியான இன்னொருவரலாறு.

இப்போதோ, மறைவில் நின்ற ஏகாதிபத்திய, பிராந்திய ஆதிக்க அரசுகள் வெளிப்படையாக அரங்குக்கு வந்து விட்டன. இன்னும் சில அந்நியர்களையும் எதிர்த்து இவ்வளவு விரைவாக போராட வேண்டியிருக்கும் என நம்மில் பலர் எதிர்பார்த்திருக்காது விட்டாலும், அக்கட்டமும் நெருங்கிவிட்டது. இவ்வெதிர்ப்புப் போராட்டத்திற்கென தனியான, கடுமையான தயாரிப்புகள் அவசியம். ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் இந்த அதிநவீன ஆதிக்க சக்திகளை, அரசியல் ரீதியில் நமது மக்கள் எதிர்கொள்ளத்தான் வேண்டும். வெகுஜன மக்கள் போராட்டங்களின் மூலமாக நடுநிலைப்படுத்த வேண்டும். விடாப்பிடியான ஒன்றுபட்ட முயற்சிகள் இதற்கு அவசியம்.

போர்க்களத்தில் தற்கொலைப் போராளிகளின் காத்திரமான பாத்திரம் போலவே, தற்போதைய நிலைமையில திறன் வாய்ந்த பல நூறு வெகுஜன அரசியல் போராளிகளை, வெகுசனப்போராட்டத்தில் தீரத்துடன் தம்மை ஈடுபடுத்தக்கூடிய போராளிகளை திரள் திரளாக நாம் உருவாக்கிடுவோம்.

ஓரணி திரண்டு புதியன படைக்கத் தயாராவோம் என்பதே நமது தேசத்தின் இன்றைய செயல் முழக்கமாகும்.

★ தருமு

## அரசியல்...(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தைப் பற்றி ஒரு வார்த்தை அமெரிக்க, ஐரோப்பிய அரசுகளும் அவர்களின் தூதுவர்களும் பேசாதிருப்பதை நாம் தற்செயல் என்று கொள்ள முடியுமா?

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய, முற்றிலும் சமத்துவமான நியாயமான, கௌரவமான, ஒரு அரசியல்தீர்வுதான் நிரந்தரமான ஒரு தீர்வினை தரும். இந்த அரசியல் ஏற்பாடு நமக்கென ஒரு சொந்த அரசினைக் கொண்டதாகவே அமைய வேண்டும். முற்றிலும் சமத்துவமான ஒரு தேச அரசு எமக்கென வேண்டும். மாறாக, அரசியலமைப்பு உத்தரவாதம், அதிகார பகிர்வு, பரவலாக்கல், இன்னும் உயர்ந்தபட்ச நிர்வாக அதிகாரங்கள்.... என்ற அரசியல் சிறுமைப்படுத்தல்களுக்கு நம் தேசத்தில் இடமேயில்லை. இந்த அரசியல் சூட்சுமங்கள், புரட்டுகள் யாவும் முடிந்து போன வரலாறு.

நமது தேச அரசுக்கு நாம் தமிழீழம் என்றுதான் பெயர் சொல்வோம். இதனை சகித்துக்கொள்ள


(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறையிருப்போரின் விடுதலைக்காய் போராடுவோம்!



**போ**ராடும் மக்களை அடக்கியொடுக்கும் ஆக்கிரமிப்பு உணர்வுடன் எதிரிகள் மக்களில் ஒருபகுதியினரால் தமது சிறைக்கூடங்களை நிரம்பி வழியச் செய்கின்றனர். வயது, பாலின வேறுபாடின்றி பல்லாண்டுகளாக சிறைகளில் அடைத்துவைத்து துன்புறுத்துவதன் மூலமாக போராடும் மக்களை உடல் உள ரீதியாக முடமாக்கி அவர்களின் போர்க்குணாம்சத்தை மழுங்கடித்து போராட்டத்தை நலிவடையச் செய்ய முயல்கின்றனர்.

இதனால் எதிரியின் கைகளுக்குள் தமது விடுதலையின் பெயரால் அகப்பட்டுக் கொண்டு ஒவ்வொரு கணப்பொழுதும் உடலாலும் மனத்தாலும் சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் இம்மக்கள் தமது போராட்டத்தில் நடைபெறும் முன்னேற்றங்களை, திருப்பங்களை, அதனோடிணைந்துள்ள தமது விடுதலையை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

உலகின் பல்வேறு போராட்டங்களிலும் சிறையிருப்போர் பிரச்சனையானது அப்போராட்டங்களுடன் பிணைந்துள்ள முக்கிய அரசியல் விடயங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. குறிப்பான பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களின் போது போராடும் மக்கள் பிரிவினர் சிறையிருக்கும் தம்மவர்களின் விடுதலையை ஒரு முக்கிய அரசியல் பிரச்சனையாக உயர்த்துவதை சமகால வரலாற்றிலேயே காண்கின்றோம்.

உதாரணத்திற்கு, அயர்லாந்து ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளின் போது சின்பென், அயர்லாந்து பெண்கள் தேசிய கவுன்சில்... ஆகியோர் தமது நிகழ்ச்சி நிரலில் சிறையிருப்போர் விடுதலையை பிரதான அம்சமாக இணைத்து முன்னெடுத்தனர். அதேபோல் பாலஸ்தீன, தென்னாபிரிக்க, கிழக்குதீமோர் போராட்டங்களும் அண்மைய உதாரணங்களாகும். 87 சிறிலங்கா - இந்திய ஒப்பந்தத்திலும் சிறையிருப்போர் விடுதலை ஒரு விடயமாக எடுத்துக் கொள்ளப் பட்டிருந்ததுடன், இந்திய-சிறிலங்கா ஒப்பந்தத்துடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சிறையிடப்பட்டிருந்த ஆயிரக் கணக்காணோர் விடுவிக்கப்பட்டனார்.

நமது தேசம் தன் விடுதலைக்காக எழுச்சிகொண்ட காலந்தொட்டு நம் எழுச்சியை சிதைக்கும் நோக்குடன் அரசியல் தலைவர்களையும் மக்களையும் கைதுசெய்து சிறையிலடைப்பதை போராட்டத்தை நசுக்கும் ஒரு வழிமுறையாக சிங்கள அரசு கைக் கொண்டு வருகிறது.

சர்வதேச மனித உரிமைகள், சிறையிருப்போர் உரிமைகள் போன்ற ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுக் கொண்டு தன்னை மனித உரிமை காப்பாளராக பிரஸ்தாபித்துக் கொள்ளும் சிங்கள அரசு, இவ் ஒப்பந்தங்களுக்கு எதிராக மனித நாகரீகமே தலைகுனியும் படியான சித்திரவதைகளை தமிழ்க் கைதிகளின் மேல் மேற்கொள்கிறது.

சிறையிருப்பவர்களின் பிரச்சினையானது அவர்களுடன் மாத்திரம் முடிவுறுவதல்ல. அவர்களது குடும்பத்தவர், சமூகம் என இது விரிவடைகிறது. சிறைப்பட்ட தம்மவர்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என இராணுவ முகாம் முகாமாக அலைந்து கண்டறிதல், சிறிலங்கா சிறைகளில் அடைக்கப் பட்டிருப்பவர்களை காண தமிழீழத்திலிருந்து சிறிலங்காவுக்கு செல்லல், புரியாத சிங்கள மொழி மற்றும் அறிமுகமற்ற புதிய இடத்தில் தமது காரியங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை, சிறிலங்காவில் தங்குமிட பிரச்சினை, பயணத்தின் போதும் விடுதிகள் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் போதும் எதிர்கொள்ள நேரும் பாதுகாப்பு கெடுபிடிகள், சிறையிருப்பவர்களை விடுவிப்பதற்காக வழக்காடுவது, இவையாவற்றிற்குமான பணச் செலவு. . . . என சிறைப்படுதலைச் சுற்றி சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளும் உருவாகியுள்ளன. சிறைப்படுபவர்கள் பெரிதும் ஆண்களாக இருப்பதால் இச்சுமைகளை தாங்குபவர்களாக பெண்கள் இருப்பதும், அதனால் பெண்கள் எதிர்கொள்ளும் குறிப்பான பிரச்சனைகளும் கவனிக்கத்தக்கதாகும். இப்படியாக, சிறையிருப்போர் விடயமானது நமது சமூகத்தில் உடன் தீர்வு காணப்பட வேண்டிய கொந்தளித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது.

சிறையில் வாடும் நம்மவர்கள் தேசிய அடக்குமுறையின் அடையாளமாக இருக்கிறார்கள் என்றால் அது மிகையில்லை. சிறையிருப்பவர்களின் பிரச்சனையானது நம்தேசத்தின் எரிகின்ற பிரச்சனைகளில் ஒன்றாயுள்ளது. ஆகவே, சிறையிருப்போரின் விடுதலையை நமது உரிமைப் போராட்டத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் இணைத்திடுவோம்.

சிங்கள அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கான சூழலை நாம் தேசமாக எதிர்கொண்டுள்ளோம். நமது தேசத்தின் நலனில் நின்று இவ்வுடன்படிக்கையை நாம் பயன்படுத்திக் கொள்வோம். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் சிறையிருக்கும் நம்மவர்களின் விடுதலையை இவ்வுடன்படிக்கையில் நமது தரப்பு கோரிக்கையாக உறுதியாக முன்வைத்திடுவோம்.

சிங்கள அரசு விடுதலைப் புலிகளிடம் சிறைப்பட்டிருக்கும் தனது படையினரின் விடுதலையை, புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் தொடர்புடைய கோரிக்கைகளில் ஒன்றாக முன்வைத்து அழுத்தி வருகிறது. பேச்சு வார்த்தை முன்னெடுப்புகளுக்கான நல்லெண்ண சமிக்ஞையாக தமது பாதுகாப்பில் இருக்கும் எதிரி தரப்பினரையும் புலிகளும் விடுவிக்கின்றனர். ஆனால் சிறையிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் இன்னும் இவ்வுரையாடல்களில் முன்னெடுக்கப்படவில்லை.

நமது தேசத்தின் சார்பில் சிங்கள அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை சார்ந்த பேரம் பேசல்களில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள், தேசத்தின் பெயரால் சிறையிருக்கும் நம்மவர்களின் விடுதலையை நமது தேசத்தின் கோரிக்கையாக இணைத்திட வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இக்கோரிக்கையை எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி முன்னெடுக்க வேண்டும் என்பது தமிழீழ மக்கள் கட்சியின் நிலைப்பாடாகும்.

★ சுபத்திரா

## அரசியல்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தயாராக இல்லாதவர்கள் எனின், எவராக இருந்தாலும், அவர்களின் அரசியல் நேர்மையை நாம் சந்தேகிக்கின்றோம். சமாதானப் பேச்சுக்கள் மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணுங்கள் என்ற அவர்களின் கூற்றுகளுக்குப் பின்னே ஏதோ சதி முயற்சிகள், இரகசிய நிகழ்ச்சி நிரல் உள்ளது என நாம் சந்தேகின்றோம். அப்படிச் சந்தேகிக்கவும், அத்திட்டங்களை நடைமுறையில் வெளிச்சத்திற்குக் கொண்டு வரவும் அவற்றை வெல்லவும் அரைநூற்றாண்டாகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு முற்றிலும் உரிமையும் உண்டு, தகுதியும் உண்டு.

யுத்தம் வேண்டாம் என்றால் முதலில் அதை ஆதரிப்பது நமது மக்கள் தான். இதனை நமது மக்கள் பலதடவை நிரூபித்துக் காட்டி விட்டார்கள். ஒவ்வொரு கணமும் இதனைத்தான் உச்சரித்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியிருக்க, எம்மிடமே வந்து யுத்தத்தின் மூலம் வெற்றி ஈட்ட முடியாது என்று அடிக்கடி கோடிகாட்டுவதற்கு வேறு ஏதும் அர்த்தம் இருக்க வேண்டும். அந்த அர்த்தம் சிறிலங்கா அரசுக்கும் அதன் ஆட்சிமுறைக்கும் அதன் பின்னே நின்று இயக்கும் தம்ஆதிக்க அரசுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிட என்பதே.

சமத்துவமான தமிழீழ குடியரசு என்பது முடிந்த முடிவு. தவிர்க்க முடியாத வரலாற்று யாதார்த்தம். ஆக அது யுத்தம் மூலமாகவா? அல்லது அரசியல் பேச்சுக்கள் மூலமாகவா? தாபிக்கப்படுவது என்பதை நிர்ணயிக்கப் போகும் காரணகர்த்தாக்கல் நாம் அல்ல. இப்பொறுப்பு, சிறிலங்கா அரசின் அரசியல் நேர்மையிலும், அதற்கு முண்டு கொடுத்து நிற்கும் அமெரிக்க, ஐரோப்பிய ஆதிக்க இந்திய வல்லரசுகளின் கைகளிலும் உள்ளது.

ஆக, சமூக அளவிலும், உணர்வு நிலையிலும், அரசியல் ரீதியிலும் பிளவுண்டு கிடக்கும் தேசங்களை, நிலவுகின்ற ஆழமான பிளவை, நிலைபெற்றுவிட்ட வேறுபாட்டை நாகரீகமாகவும், அரசியல் வழியிலும் முடிவிற்குக் கொண்டு வந்து அமைதியான, சமாதானமான தமிழீழம் அமைய சம்பந்தப்பட்டவர்கள் நேர்மையாக முயல வேண்டும். ஆனால் உண்மையில், சர்வதேச ஆதிக்க அரசுகளும் இந்திய அரசும் எம்மீதான தேசிய அடக்குமுறையின் அகோரத்திற்குப் பொருத்தமுடைய யதார்த்தமான அரசியல் தீர்வில் அக்கறை கொள்ளவில்லை. பதிலாக தமது நிகழ்ச்சி நிரலின்படியே விடயங்களை நகர்த்துகின்றனர்.

இன்றைய உலக சூழலில் ஒரு குறிப்பிட்ட தூரம் வரைக்கும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கும் அரசியல் பேச்சுக்கள் என்ற வழிமுறைகளுக்கூடாக நாம் பயணிக்க வேண்டியிருக்கின்றது. இது அவர்கள் மீதான நம்பிக்கையின் பாட்பட்டு அல்லாது, நமது தேசம் தன் இலக்கு நோக்கி தங்குதடையின்றியும், திடமாகவும் ஆரோக்கியமாகவும் நடைபோடுவதற்கான தயாரிப்புகளைச் செய்வது கொள்வதற்கே.

இந்தப் பின்புலத்தில், எமது தேசத்தின் அடிப்படைக் கோரிக்கையான சுதந்திர தமிழீழக் குடியரசு என்ற நிலைப்பாட்டை ஒரு போதும் கைவிடாதிருப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள் - 06

# தொழிலாளர்கள்



பெரும்பான்மை மக்கள் பிரிவினரின் உழைப்பை மிகச் சிறுபான்மையானோர் அபகரித்துக்கொள்ளும் முறைமை உருவானது முதல், பிறருக்காக உழைக்கும் மக்கள் திரளினர் விரிவாக்கம் பெற்று வருகின்றனர்.

இன்றைய உலகை ஆதிக்கம் செய்யும், தனது நலனுக்கேற்ப நெறிப்படுத்தும் முதலாளித்துவ முறைமையானது, தொழிலாளரின் உழைப்புச் சக்தியில் உயிர்வாழ்கிறது. முதலாளித்துவ அமைப்பின் தோற்றத்தை நாம் திரும்பிப் பார்ப்போமானால், கைத்தொழில் பேட்டைகளில் உழைப்பதற்கான தொழிலாளர்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதை காண முடியும். இதற்காக செயற்கையாக வரட்சிகளும் பஞ்சமும் ஏற்படுத்தப்பட்டன, வளமான விவசாய நிலங்கள் பாழ் நிலங்களாக்கப்பட்டன, மழைக்காடுகள் தரிசாக்கப்பட்டன.... பஞ்சத்தாலும் தொழில்தேடியும் அலைந்த மக்கள் மிகமலிந்த கூலிக்கு தொழிற்சாலைகளை நாடிச்செல்லும் நிலை உருவானது. வன்முறையாலும் தொழிலாளர்கள் திரட்டப்பட்டனர்.

இன்றும் ஏகாதிபத்திய - அந்நிய நிதி மூலதனத்திற்கு சேவை செய்வதற்காக நம்மைப் போன்ற மூன்றாமுலக நாடுகளில் தொழிலாள திரளினர் உருவாக்கப்பட்டு வருகின்றனர். இதற்காக நவீன விஞ்ஞானத்தின் உதவியுடன் ஏகாதிபத்தியமும் அதற்கு சேவைசெய்யும் உள்ளூர் தரகு முதலாளித்துவ பிரிவும் மூன்றாமுலகினை உழைப்பை விற்று வாழும் மக்கள் பிரிவினரின் பிரதேசமாக தொடர்ச்சியாக திட்டமிட்ட முறையில் மீளுற்பத்தி செய்து வருகின்றன. ஏகாதிபத்திய மூலதன திரட்சிக்கான உழைப்பு சக்தி மூன்றாமுலகில் மையங் கொண்டிருக்கிறது எனும் வகையில், ஏகாதிபத்தியத்தையும் தரகு முதலாளித்துவத்தையும் தாங்கி நிற்கும் முதுகெலும்பாக மூன்றாமுலகின் தொழிலாள மக்கள் உள்ளனர்.

அதுமாத்திரமன்றி, உச்சபட்ச லாபத்தை திரட்டும் நோக்குடன் தொழிலாளர் மத்தியில் தொழில் போட்டியை பேணும் விதமாக வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வேலையில்லாப் பிரிவினரையும் கூடவே செயற்கையாக முதலாளித்துவம் உருவாக்கி வருகிறது. மூன்றாமுலகின் வேலையில்லாப் பிரச்சினை என்பது ஏகாதிபத்தியத்தினதும் அதைச்சார்ந்துள்ள உள்ளூர் தரகு முதலாளித்துவத்துவ ஆதிக்க கூட்டுகளினதும் திட்டமிட்ட சூழ்ச்சிகளின் விளைவேயாகும்.

உலக மயமாக்கல் முறைமையுடன் ஏகாதிபத்திய - முதலாளித்துவ அமைப்பானது “அறிவுத்துறை” என்பதை திட்டமிட்டு அதிகாரவயப்பட்ட ஒன்றாக உருவாக்கியிருப்பதால், முதலாளித்துவ முறைமைக்குட்பட்ட உயர்கல்விசார் மூளையுழைப்பானது அதிகார வயப்பட்டதாக உருப்பெற்றுள்ளது.

எனினும், மூன்றாமுலகில் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் களங்களில் ஒன்றாயிருக்கும் அடிநிலை மூளையுழைப்பானது உடல் உழைப்பைப் போன்றே கசக்கிப் பிழியப்படுகின்றது. தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் அதிகளவில் உள்ள இவ் அடிநிலை மூளையுழைப்பாளர்களை நாம் தொழிலாளர் பிரிவிற்குள் உள்ளடக்கிட முடியும்.

நமது தேசமும் பல்வேறு உடலுழைப்புகளிலும் அடிநிலை மூளையுழைப்பிலும் ஈடுபட்டு தேசத்தின் பொருளாதார, சமூக வாழ்வை தொடர்ச்சியாக மீள் நிர்மாணம் செய்துவரும் தொழிலாளர் பிரிவினரைக் கொண்டுள்ளது.

சிங்கள தேசத்தை மையப்படுத்தி ஆட்சி முறைமை வகுத்து நடைமுறைப்படுத்தி வரும் சிங்கள தரகு முதலாளித்துவ அரசியல் தலைமை, தமிழ் தொழிலாளர்களின் உரிமைகளை அபகரித்தது. ஆரம்பத்தில் அரச சிவில் நிர்வாகத்தில் அடிநிலை மூளையுழைப்பில் ஈடுபட்டுவந்த தமிழ் தொழிலாளரை திட்டமிட்டு துரத்தியடிக்குமுகமான முயற்சிகளில் இறங்கியது. தனிச்சிங்கள சட்டம் இதனுடனும் தொடர்புபட்டதுதான். இதைத் தொடர்ந்து கொழும்பையும் சிங்களப் பிரதேசத்தையும் மையமாகக் கொண்டு செயற்பட்டு வந்த தொழிலாளர்களை பல்வேறு வழிமுறைகளையும் பிரயோகித்து(வன்முறை, அச்சுறுத்தல், தொழிற்தள இழிவுபடுத்தல்...) வெளியேற்றியது.

இனவெறி அரசின் கரங்கள் தமிழீழ பிரதேசத்தையும் நோக்கி நகர்ந்தது. தமிழீழ பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதை திட்டமிட்டு தவிர்த்தது. இதனால் அபிவிருத்தியுடன் தொடர்புடைய அனைத்து வகைப்பட்ட தொழிலாள பிரிவினரினதும் வளர்ச்சியும் ஸ்திரத்தன்மையும் நமது பகுதிகளில் நிகழாது போனது. தமிழீழத்தில் செயற்பட்டுவந்த தொழிற்சாலைகளையும் பல்வேறு நிறுவனங்களையும் சிங்கள அரசு மூடியது. இன்னும் பல உற்பத்தி மையங்களும், நிறுவனங்களும் யுத்தத்தால் சிதைக்கப்பட்டன, தொடர்ந்தும் செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் தமிழீழ தொழிலாளர்களும் தொழிலாளர் அணியைச் சார்ந்தவர்களும் தமது தொழில் செய்யும் அடிப்படை உரிமைக்காக போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஈழத்தமிழர் மீது திட்டமிட்டு இனவன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ள சிங்கள அரசின் கீழ் தாம் அடிப்படையில் மனிதர்களாக உழைத்துண்டு வாழமுடியாது என்பதை அனுபவபூர்வமாக கண்டு கொண்ட தமிழீழ தொழிலாளர்கள் தமக்கான தேச அரசின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர். தேசத்தின் அனைத்து தொழிலாள பிரிவினரும் படிப்படியாக தமிழீழ விடுதலையுடன் தம்மைப் பிணைத்துக் கொள்ளத் தொடங்கினர். விடுதலைப் போராட்ட அமைப்புகளை ஆதரித்து பலப்படுத்தத் தொடங்கினர். தமது உழைப்பாலும் பல்வேறு பங்களிப்புகளாலும் போராட்ட அமைப்புகளை போஷித்தனர்.

எனினும் எந்தவொரு போராட்ட அமைப்பும் (சோசலிசம் கதைத்தவர்கள் உட்பட) விடுதலைப் போராட்டத்தில் தொழிலாள பிரிவினரின் முக்கியத்துவத்தை உணர்ந்து போராட்டத்தின் சமத்துவமான பங்குதாரராக்க செயற்படவில்லை. இம் மக்கள் பிரிவினிரிடமிருந்து தமக்கான ஒத்துழைப்புகளை பெறுவதுடன் உறவுகளை மட்டுப்படுத்திக் கொண்டன. அதுமாத்திரமின்றி, தொழிலாளரின் நலன்களை அசட்டை செய்ததுடன் தமது பங்கிற்கு தொழிலாளர்களை நசுக்கிடும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. இப்போக்கு இன்று வரையிலும் நமது போராட்டத்தில் நிலவிடுகிறது.

நம் தேசத்தின் தொழிலாளர்களை நாம் தோராயமாக கிராமியத் தொழிலாளர், நகர்சார் தொழிலாளர், அடிநிலை மூளையுழைப்பாளர், சுகாதாரத் தொழிலாளர், கைவினைத் தொழிலாளர், உதிரித் தொழிலாளர் என வகைப்படுத்திட முடியும்.

நம் தேசத்தின் அடிப்படை இயற்கைசார் உற்பத்தித் துறைகளான விவசாயம், கடற்றொழில், பனைவளம், காட்டு வளம் ஆகிய துறைகளில் அன்றாடக் கூலிக்காக உடலுழைப்பில் ஈடுபடுபவர்களை நாம் கிராமியத் தொழிலாளர்களாகக் காண்கிறோம்.

நகர்சார் தொழிலாளர்களில் இரண்டு முக்கிய பிரிவினர் அடங்குகின்றனர். ஒரு பிரிவினர் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்கள்: (அரச உடமையாகவுள்ள தொழிற்துறையின் தொழிலாளர்கள் தொடக்கம் தனியார் தொழிற்சாலை தொழிலாளர்கள் வரை) உப்பளத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், நெடுஞ்சாலை சீரமைப்பு மற்றும் புகையிரத துறை தொழிலாளர்கள், கப்பல் இறங்குதள தொழிலாளர்கள், பெருந் தொழிற்சாலைகளான பிரிமா ஆலை மற்றும் காகித தொழிற்சாலை சார் தொழிலாளர்கள், மின்சார மற்றும் தொலைபேசி திருத்த தொழிலாளர்கள்...). அடுத்த பிரிவினர் விளிம்பு நிலைத் தொழிலாளர்கள் (நகர வாழ்வுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுவோர்): இப்பிரிவிற்குள் வகுப்புத் தொழிலாளர் (சுமை தூக்குவோர்), கடைச் சிப்பந்திகள், காரியாலய சிற்றூழியர்கள், தையல் தொழிலாளர்கள், சிறுபட்டறை மற்றும் சிறு உற்பத்திசார் தொழிலாளர்கள், சாரதிகள், அரிசி மற்றும் எண்ணெய் ஆலை தொழிலாளர்கள்.... போன்றோர்.

நகரை மையமாகக் கொண்டு நகரும் தொழில்களுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இன்று நமது தேசத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூளையுழைப்பாளர் எனும் பிரிவிற்குள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் வியாபார மையங்களிலும் அதிகாரங்கள் அற்றவர்களாக பல்வேறு அடிநிலை மூளைஉழைப்புகளிலும் ஈடுபடுபவர்கள் அடங்குகின்றனர்.

கைவினைத் தொழிலாளர்கள் எனும் பிரிவிற்குள் மரவேலை, மட்பாண்டம், பன்புல் சார் உற்பத்திகளில் ஈடுபடுவோர், சிற்ப வேலை, நெசவு (கைத்தறி) மற்றும் நகை தொழிலாளர்கள். . . . ஆகியோர் அடங்குவர்.

நகர சுத்திகரிப்பு, சலவை, சிகையலங்காரம், உடலம் அகற்றும் - புதைக்கும் - எரிக்கும் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள், வைத்தியசாலை சுத்திகரிப்பு ஊழியர்கள். . . சுகாதாரத் தொழிலாளர்கள் எனும் பிரிவிற்குள்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் மீதான சித்திரவதைகளை போராடி முறியடிப்போம்!

நம் தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிங்கள இனவெறி படைகள் தமிழ் பெண்களான நமது உடலை சித்திரவதைகள் புரிந்து சிதைப்பதை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன. தமிழீழத்தில் எந்த அநியாயத்தையும் புரிய இனவெறி அரசினால் பூரண ஆசிகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் இப்படைகள், நமது தாயக பிரதேசத்தையே நம்மை துன்புறுத்தும் சிறைக்கூடங்களாக மாற்றியுள்ளன.

தேசிய ஆக்கிரமிப்பை சிங்கள அரசு நம்தேசத்தின் மீது கட்டவிழ்த்து விட்ட காலம் தொட்டு தமிழ்ப் பெண்கள் சிங்கள படைகளினால் எதிர்கொண்டு வரும் உடல் - உள சித்திரவதைகளுக்கு அளவில்லை. இவ்வாறு தமிழ்ப் பெண்களை துன்புறுத்துவதை தேசிய அடக்குமுறையின் ஒரு பண்பாக சிங்களப் படைகள் கொண்டுள்ளன.

குறிப்பாக, தாம் கைது செய்யும் தமிழ் பெண்களை அரக்கத்தனமான, மனித நாகரீகத்தையே அச்சுறுத்தும் வகையிலான சித்திரவதைகளுக்கு சிங்களப் படைகள் உள்ளாக்கி வருவது அம்பலமாகியுள்ளது. கைது செய்யப்பட்ட நிலையில் தமிழ் பெண்களை கூட்டு வன்புணர்ச்சிக்கும், வதைகளுக்கும் உள்ளாக்குவதை பெண்களைத் தண்டிக்கும், தமிழ்ப் பெண்களின் ஆளுமையையும் போர்க்குணாம்சத்தையும் சிதைக்கும் ஒரு ஆயுதமாக இப்படைகள் கைக்கொள்கின்றன. அதேநேரம், பெண் உடலை தமது வக்கிரங்களை வெளிப்படுத்துவதற்கான களமாகவும் ஆக்குகின்றன.

சிறைபடு நிலையில் வன்புணர்ச்சி (custodial rape) என்பது சிறிலங்கா குற்றவியல்க் கோவையில் தண்டனைக்குரிய குற்றமாக உள்ளது. அதேபோல், சர்வதேச அளவிலான மனித உரிமை, பெண்ணுரிமை சட்டங்களும் சிறைபடு நிலை வன்புணர்ச்சியை பாரதூரமான குற்றமாக்குகின்றன.

எதுவித எதிர்ப்பையும் வெளிப்படுத்த முடியாது தாம் சிறைப்பட்டிருக்கும் நிலையில் பெண்கள் மீது நடாத்தப்படும் இப்பாலியல் குற்றத்திற்கு, பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலமும் மருத்துவ அறிக்கையுமே போதுமான சாட்சியங்களாகும்.

அவ்வகையில் எதிரிகளிடம் சிறைப்பட்ட நிலையில் வன்புணர்ச்சிக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளான பெண்களின் வாக்குமூலங்கள் உரிய கரிசனைக்கு எடுக்கப்பட்டு, **"குற்றவாளிகளுக்கு தண்டனை, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம்"** என்பதை குறிக்கோளாகக் கொண்டே இவ்விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும்.

இன்று தமிழ் பெண்கள் எதிரிகளிடம் கைதாக நேர்வதும் சித்திரவதைகளை எதிர்கொள்ள நேர்வதும் தேசத்தினதும் விடுதலைப் போராட்டத்தினதும் பெயராலாகும். அவ்வகையில், பெண்கள் மீதான சித்திரவதைகள் என்பன நமது தேச அடக்குமுறையின் ஒரு வடிவமாக, தேசமாக போராடி முறியடிக்கப்பட வேண்டிய அரசியல் விடயமாக உருப்பெற்றுள்ளன.

எனவே, எதிரிகளின் படையரணுக்குள் நமது பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக போராட வேண்டிய கடப்பாடு, கூட்டுப் பொறுப்பு நம் தேசத்தின் தோள் சார்ந்ததாகும். தேசமாகத் திரண்டு நம்மாளான அனைத்து வழிகளையும் பிரயோகித்து எதிரிகளின் பிடியிலுள்ள பாதிக்கப்பட்ட நமது பெண்களின் சார்பில் போராடுவோம்.

நமது போராட்டம் இரண்டு வகைப்பட்டதாகும். ஒன்று பாதிக்கப்பட்ட நமது பெண்களுக்காக உடனடி நிவாரணம் கோரும், குற்றவாளிகளைத் தண்டிக்கும், இவ்வாறான குற்றச் செயல்களை நம்மாலியன்றவரை தடுத்து நிறுத்தக் கூடிய உடனடி போராட்ட நடவடிக்கைகள்.

அடுத்தது, அந்நியப் படைகளை நமது தாய் மண்ணிலிருந்து முற்றாக துடைத்தெறிந்து நமது பெண்களின் உடல் உயிர்ப் பாதுகாப்பை, நமது பெண்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்திக்



கொள்ளும் நிரந்தர விடுதலைக்கான போராட்டமாகும்.

விஜிகலா, சிவமணி ஆகிய நமது இரு சகோதரிகள் மன்னார் உப்புக்குளம் படையரணில் கூட்டு வன்புணர்ச்சிக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளானதை தாமே வெளிப்படுத்தி எதிரிகளை அம்பலமாக்கியுள்ளனர். நம் சகோதரிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகண்டு நம் தேசமே இன்று கொதித்துக் கொண்டிருக்கிறது. நம்மனைவரினதும் கோபாவேசத்தை, நம் தேசத்தில் கிளர்ந்துள்ள எதிர்ப்பு போராட்டங்களை நமது சகோதரிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவுமான இலக்கு நோக்கி செயல்பூர்வமான போராட்டங்களாக மாற்றுவோம்.

- நமது தேசத்தின் சட்டத் தரணிகள், மத ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிகள், பொது மனிதர்கள் அடங்கிய விசேட சிவில் பிரதிநிதிகள் குழுவே நமது பெண்களின் சார்பில் இவ்விசாரணையை பொறுப்பேற்க வேண்டும். இதுவே மக்கள் சார்பு விசேட ஆணைக்குழுவாகவும் அமைய வேண்டும். எதிரிகளின் வன்முறை இயந்திரத்தை சார்ந்த எவருக்கும் இதில் இடமில்லை.
- சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்காணிப்பில் இவ்வழக்கு நடைபெற வேண்டும்.
- சிறைநிலை வன்புணர்ச்சி மற்றும் துன்புறுத்தல் (custodial rape and torture) எனும் வகையில் எந்த விதமான நீதிமன்ற குறுக்கு விசாரணைகளாலும் நமது சகோதரிகளைத் துன்புறுத்தக் கூடாது. சகோதரிகளின் வாக்குமூலமும் மருத்துவ அறிக்கையுமே தீர்ப்பிற்கான ஒரே ஆதாரமாக அமைய வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நமது பெண்களுக்காக நமது தேசத்தின் சார்பில் ஆற்றல் மிக்க சட்டத் தரணிகளை நியமிப்போம்.
- பாதிக்கப்பட்ட நமது பெண்கள் தொடர்ந்தும் எதிரியின் காவலில் இருப்பது, அவர்களின் உடல் உயிர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே அமைகிறது. அத்துடன் அது மேலும் அவர்களை உளவியல் ரீதியாக வதைப்பதுடன், அவர்களுக்கவசியமான வைத்திய நிவாரணங்களுக்கும் வாய்ப்புகளைத் தராது. எனவே விசேட நிவாரண இல்லத்திற்கு நமது சகோதரிகளை இடம் மாற்ற வேண்டும். இவ்வில்லம் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற் குட்பட்டதாக அல்லது ஒரு கன்னியர் மடமாக அமையலாம்.
- குற்றவாளிகளுக்கு யுத்தகால குற்றங்களுக்காகவும், பெண்களை சிறைநிலை துன்புறுத்தலுக்குள்ளாக்கியதற்காகவும் கடுந்தண்டனை வழங்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன் அவர்களை விடுவிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட நமது பெண்கள் தம்மை துன்புறுத்திடும் எதிரியின் காவலில் உள்ள நிலையில் எதிரிகளாலேயே விசாரணை செய்யப்படுவதற்கு முடிவுகட்டி, நம்மவர்களுக்கான நீதி விசாரணையை நமது கைகளில் எடுத்துக் கொள்வோம். இதன் மூலம் எதிர்காலத்தில் நம் தேசப் பெண்கள் எதிரிகளினால் துன்புறுத்தலுக்குள்ளாகாதிருப்பதற்கான எச்சரிக்கையை விடுப்போம்.

எதிரிகளினால் நம் தேசப் பெண்களுக்கு இழைக்கப்படும் பல கொடுமைகள் அச்சத்தினாலும், சமூக தூற்றுதல்களுக் கஞ்சியும் வெளிப்படுத்தப்படாமல் புதைந்து போகின்றன. இந்நிலைக்கு முடிவு கட்டுவோம். நமது உடல் மீது குற்றம் புரியும் எதிரிகளே குற்றவாளிகள், இக்கயவர்களை அம்பலப்படுத்தி நமக்கிழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக அவர்களை தண்டனைக் குள்ளாக்க வேண்டும், சிங்கள அரசும் படைகளும் தமிழ் பெண்கள் மீது நடாத்திடும் அடக்குமுறைகளை உலகுக்கறிவித்திட வேண்டும் எனும் விழிப்புணர்வை நம் தேசத்தில் பரவலாக ஏற்படுத்திடுவோம்.

இவ்விடயத்தில் நமது சகோதரிகள் சிவமணியும் விஜிகலாவும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர். சமூக தூற்றுதல்களையும் எதிரியினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களையும் எட்டியுதைந்துவிட்டு, தம்மீதான துன்புறுத்தலை தமிழீழப் பெண்கள் மீதான துன்புறுத்தலின் குறியீடாக உலகிற்கு அம்பலப்படுத்தியுள்ளனர். இச் சகோதரிகளை பெண்விடுதலையின் முன்னணி வீராங்கனைகளாகக் கொண்டாடுவோம்.

எதிரியின் சித்திரவதைகளால் உடல் உளக் காயத்திற்குள்ளாகியுள்ள நம் சகோதரிகளை தேசமாகத் தாங்குவோம். எமது கரிசனையும் அரவணைப்பையும் அவர்களுக்கு வழங்குவோம். தமது உடல் உளக் காயங்களிலிருந்து மீண்டு தொடர்ந்தும் தமது ஆளுமையிலும் போர்க்குணாம்சத்திலும் உறுதியுடையவர்களாக சமூகத்தை எதிர்கொண்டு வாழ்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை அவர்களுக்கு வழங்குவோம்.

நமது சகோதரிகள் மீது சிங்களப் படைகள் மேற்கொண்ட துன்புறுத்தல்கள், அவர்களுடன் மட்டுப்படும் தனிநபர் விடயமல்ல. இது தமிழ் மக்கள் மீதான வன்மத்தால், தமிழர்களை துன்புறுத்தும் தண்டிக்கும் நடவடிக்கையாயுமுள்ளது. அவ்வகையில் சிங்கள அரசு தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

★ சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மதஊழியர்களின் பாத்திரம்!

**தா**ம் சார்ந்த மதங்களுக்கு சேவையாற்றுவதற்காக தம்வாழ்வை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்களை நாம் மத ஊழியர்களாக காண்கிறோம். குறிப்பாக, கத்தோலிக்க/கிறிஸ்தவ மற்றும் பௌத்த மதங்களே மத ஊழியத்திற்காக தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும் பெண்களையும் ஆண்களையும் உள்வாங்கி வருகின்றன. அவ்வகையில் இம்மதப் பிரிவுகள் தமக்கான விரிந்த தளத்திலான நிலையான ஊழியர்களையும், நிர்வாகங்களையும், விதிமுறைகளையும் உடைய மிகவும் இறுக்கமான, உறுதிமிக்க நிறுவனங்களாக சமூகத்தில் வேர்பாய்ச்சியுள்ளன.

சமூகத்துடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணுபவர்களாக கத்தோலிக்க/ கிறிஸ்தவ மற்றும் பௌத்த மதங்களின் ஊழியர்கள் உள்ளனர். இம்மத ஊழியர்களில் ஒரு சாரார் ஆதிக்க சக்திகளுடன் தம்மை பிணைத்துக் கொண்டு அவர்களின் முகவர்களாக இருந்து மக்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். பெரிதும், மத நிறுவனங்களின் அதிகார பீடங்கள் இப்படியாக சமூகத்தின் ஆதிக்க தரப்பினருடனும், அரசுடனும் இணைந்து செயற்படுவதை நாம் காணக்கூடிய தாயுள்ளது.

இன்னுமொரு சாரார் அடக்கப்பட்ட மக்களுடன் நெருங்கி செயற்படுவதன் மூலம் இம்மக்களின் வாழ்க்கை அவலங்களையும், இதற்குக் காரணமாயிருக்கும் ஆதிக்க பிரிவினரதும் அரசினதும் அட்டூழியங்களையும் கண்டு மனங்கொதித்து மக்களின் விடுதலைக்காக செயற்படும் மத ஊழியர்களாக பரிணமிக்கின்றனர். இவர்களே நமது அக்கறைக்குரியவர்கள். இவர்களையே நாம் நட்புசக்திகளாகக் காண்கிறோம்.

மனித வரலாற்றில் மதம் எனும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட காலங்களிலிருந்து, மத ஊழியர்களில் ஒரு சாரார் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தியும் அதற்காகப் போராடியும் வந்திருப்பதை நாம் அறியக் கூடியதாயுள்ளது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன், ஏகாதிபத்திய முகாம் எனவும் மூன்றாமுலகம் எனவும் திட்டவட்டமாக வேறுபட்ட நலன்களைக் கொண்டுள்ள பிரிவுகள் வரலாற்றில் உருவாகியதுடன், மத ஊழியர்களின் மத்தியிலும் சமூகம் சார்ந்து வெவ்வேறுபட்ட நிலைப்பாடுகள் இருப்பது தெட்டத்தெளிவாக வெளிப்படத் தொடங்கியது.

ஜெர்மனியின் முதன்மை மதப்பிரிவாக இருந்துவரும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதமானது, ஹிட்லரின் நாசிசத்தை மிகவும் அமைப்பாக்கப்பட்ட வடிவத்தில் தொடர்ச்சியாக எதிர்த்துவந்த சக்திமிக்க தளமாக இருந்தது. தாம் சார்ந்த மக்களின் மத்தியில் மிகவும் ஆழமாக வேர்பாய்ச்சியிருந்த இம்மதபீடம், இடதுசாரி அரசியலுக்கு சார்பான போக்கை வெளிப்படுத்தியதுடன், நாசிகளின் இராணுவ வெற்றிக்காக பிரார்த்தனை செய்ய கறாராக மறுத்துவிட்டது. இதனால் புரட்டஸ்தாந்து குருமார் பலரும் நாசிகளின் சித்திரவதை முகாம்களில் உயிரிழக்க நேர்ந்தது.

இலத்தீனமெரிக்க தேசங்கள் இன்றுவரையிலும் மத ஊழியர்களின் உன்னதமான மக்கள் சினேகத்திற்கும் விடுதலையுணர்விற்கும் சான்று பகர்ந்து வருகின்றன. கத்தோலிக்க மதத்தின் ஆதிக்க நலன்காக்கும் போக்குகளை எதிர்த்து, இயேசு கிறிஸ்துவின் உண்மையான இலட்சியங்களை ஆதாரமாகக் கொண்ட விடுதலை இறையியல் எனும் மக்களின் சமூக விடுதலைக்கு உரமூட்டும்



ஆன்மீகக் கொள்கையை இவ் இலத்தீனமெரிக்க மத ஊழியர்கள் வகுத்துக் கொண்டனர். இதனால் இவர்கள் வத்திக்கானின் கண்டனத்திற்கு உள்ளாகியதுடன், இதற்குத் தண்டனையாக இவர்களில் சிலர் மத ஊழியத்திலிருந்து நீக்கப்பட்டனர்.

கிறிஸ்தவத்தில் பொதிந்துள்ள அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கொள்கைக்கும் மார்க்சியம் மற்றும் கொம்யூனிச சிந்தனைக்குமிடையே உள்ள ஒத்த பண்பை இக்கத்தோலிக்க மத ஊழியர்கள் அடையாளங் கண்டதினால், இலத்தீனமெரிக்காவின் கெரில்லா அமைப்புகளில் இணைந்து போராடினர். வீரமரணமும் அடைந்தனர். மத ஊழியர்களாக இருக்கும் அதேசமயம் கெரில்லாப் போராளிகளாவும் வாழ்ந்து வருகின்றனர்.

கொலம்பியாவின் முன்னணி கெரில்லா மற்றும் அரசியல் அமைப்பான **காமிலிஸ்ரா ஐக்கிய தேசிய விடுதலை இராணுவம் (UCELN)** இன் ஸ்தாபகர்களில் ஒருவரும் தலைவருமான அண்மையில் மரணமடைந்த மனுவல் பெர்ஸ் மார்ட்டின் ஒரு கத்தோலிக்க மத குருவே.

இலத்தினமெரிக்க மக்களின் போராட்டங்களில் விடுதலையுணர்வுடைய கத்தோலிக்க குருமாரின் பாத்திரம் பிணைந்து கிடக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான வியட்நாம் மக்களின் வீரமிகுப் போராட்டத்தில் வியட்நாமிய பௌத்த பிக்குமார் இணைந்து நின்றனர். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு தமது எதிர்ப்பைக் காட்டுமுகமாக தம்மையே உயிரோடு தீயிட்டுக் கொளுத்திக் கொண்ட பௌத்த துறவிகளின் வீரமிகு வரலாற்றை வியட்நாமிய மண் பெருமையுடன் சுமந்து நிற்கிறது.

தென்னாபிரிக்க விடுதலையின் முன்னணிப் போராளியாக, மக்கள் தலைவராக திகழும் ஆயர் டுட்டு, கறுப்பு மக்களின் விடுதலைக்காக போரிட்ட இன்னும் பல மத ஊழியர்கள்...

அடக்கப்பட்ட சிங்கள மக்களின் விடுதலைக்காக ஜே.வி.பி.யுடன் தம்மை இணைத்துக் கொண்டு செயற்பட்டதற்காக அரச படை களினால் குரூரமான சித்திரவதைகளை எதிர் கொண்டு படுகொலைக்குள்ளான நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குமார்... இஸ்லாமிய மத போதகராக இருந்தபடி, பாசிச இத்தாலியின் ஆக்கிரமிப்பிப்பை எதிர்த்து லிபிய மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவரும், அதன் காரணமாக தூக்குத் தண்டனைக்கு உள்ளாகியவருமான வயது முதிர்ந்த ஒமர் முக்தார்... ஈரான் புரட்சியில் தலைமை தாங்கி வழிநடாத்திய ஆயதுல்லா கொமெய்னி. . . .

இப்படியாக, மக்களது விடுதலையுடன் தம்மைப் பிணைத்துக் கொண்ட மத ஊழியர்களின் வாழ்வை நாம் வரலாற்றில் காண்கிறோம்.

அதேபோது, தேசத்தின் விடுதலைக்காகப் போராடிவரும் தமிழீழ மக்களான நாம், மக்களின் மீது அன்புகொண்ட, மக்களின் விடுதலையில் பற்றுடைய மத ஊழியர்களை நம் மத்தியிலும் கொண்டிருப்பதையிட்டு பெருமிதங்கொள்கிறோம்.

குறிப்பாக, கத்தோலிக்க மதப்பிரிவைச் சார்ந்த குருமாரும், அருட் சகோதர சகோதரிகளும் யுத்தத்தினால் சமூக வாழ்க்கை சிதைக்கப்பட்டு அதிகதிகளாக வாழும் மக்களின் மத்தியில் வாழ்ந்து மக்களுக்கு பெரும் சேவையாற்றி வருகின்றனர். அடக்கப்படும் நமது தேசத்தின் நியாயமான உரிமைகளுக்காக மக்களின் நலனில் நின்று குரல்கொடுக்கின்றனர். நமது மக்களின் அவலங்களை சர்வதேச மயப்படுத்துவதனூடாக சிங்கள அரசை சர்வதேச சமூகத்தின் முன்னால் கேள்விக்குள்ளாக்குகின்றனர்.

இப்படியாக, தேசத்தின் குரலாக ஒலிக்கும் மத ஊழியர்களை சிங்கள ஊடகங்கள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்துகின்றன. அரசோ நமது தேசத்தின் மத ஊழியர்கள் மீது தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. தனதுபடைகளை ஏவி மதஊழியர்களை கைது செய்து சித்திரவதைக் குள்ளாக்குகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கிறது. படுகொலை செய்கிறது.

தமிழ் மக்களின் உரிமைகளோடு தம்மை அடையாளங் காணும் தமிழீழத்தின் மத ஊழியர்கள் மீது சிங்கள அரசும் படைகளும் பெரிதும் காழ்ப்பைக் கக்குகின்றன. தேவாலயங்கள் மீது குண்டெறிந்து தமது பகைமையை வெளிப்படுத்துகின்றன. எனினும் நமது தேசத்தின் மத ஊழியர்கள் மக்களுக்கான தமது சேவைகளில் பின்னடையவில்லை.

சமூகத்தில் அங்கீகாரம் பெற்ற, மக்களின் கௌரவத்திற்குரிய பிரிவினராயிருக்கும் மத ஊழியர்களுக்கு முன்னால் அவர்கள் இன்னும் தேசத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் குவிந்து கிடக்கின்றன. ஏகாதிபத்திய அச்சுறுத்தலை நம் சின்னஞ்சிறு தேசம் எதிர்கொண்டிருக்கும் நிலையில், மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றும் பணியை மேற்கொள்வதுடன், தமிழீழ மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுத்திடவும் போராடவும் வேண்டிய இரட்டை பொறுப்பை நமது மத ஊழியர்களும் கொண்டுள்ளனர்.

தமிழீழ மக்களான நமது உரிமைகளுக்காக, தமிழகத்திலும் மனித நேயமுள்ள கத்தோலிக்க/ கிறிஸ்தவ மத ஊழியர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக, கத்தோலிக்க மதப்பிரிவினரால் நடாத்தப்படும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ச் சேவையானது தமிழீழ தாயகத்திலும் அதேபோல் உலகெங்கும் சிதறுண்டு வாழும் ஈழத் தமிழருக்கு ஆன்மீக உந்து சக்தியை வழங்கும் ஊடகமாக திகழ்கிறது.

மத சேவையை மக்களுக்கான சேவையாக இனங்காணும் மத ஊழியர்களின் விடுதலையுணர்வை தேசமாக நாம் கௌரவிப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தொழிலாளர்கள்.. (4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அடங்குகின்றனர்.

நம் தேசத்துத் தொழிலாளர்கள் பாரம்பரியமாக மேற்கொண்டு வந்த தொழில்கள் சிதைவுண்டிருக்கும் நிலையில் அத்தொழில்களிலிருந்து வெளியேறிய தொழிலாளர்கள் பலரும் இன்று உதிரித் தொழிலாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அன்றாட வாழ்வை நடாத்துவதற்காக அன்றைய தினம் தமக்குக் கிடைத்திடும் ஏதாவதொரு தொழிலில் ஈடுபடுபவர்களை நாம் உதிரித் தொழிலாளர்களாகக் காண்கிறோம். பாரம்பரியமாக காடுகளை சார்ந்து விறகுவெட்டி விற்போர், தேன் சேகரிப்போர், வேட்டையாடுவோர் ஆகியோரும் இப்பிரிவிற்குள் அடங்குவர்.

"சட்டவிரோதமான" தொழில்களில் (உள்ளூர்ச் சாராயம் வடித்தல், காட்டு மரங்கள் தறித்தல், கடத்தல்...) ஈடுபடும் தொழிலாளர்களே உதிரித் தொழிலாளர்களாக பெரிதும் அடையாளப்படுத்தப்படினும், அமைப்பு வடிவம் பெற முடியாத தொழில் முறைமைக்குள் உள்ள தொழிலாளர்களே உதிரித் தொழிலாளர்கள் எனும் வகையினத்துள் அடங்குகின்றனர்.

நிரந்தமான ஒரே தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபட முடியாதவகையில் வேலையின்மை நிலவுவதால், அன்றாடம் தொழிலுக்காக தொழிலாளர்கள் அலைந்திடும் நிலையில் நம் தேசத்தில் உழைப்பின் மதிப்பு கீழிறக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் தாம் பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் தொழில்களிலும், தமக்கு அன்றாடம் கிடைக்கக் கூடிய தொழில்களிலும் ஈடுபட முடியாதவாறு சிங்கள அரசானது தனது படைகளின் துணைகொண்டு தமிழீழ தொழிலாளரின் மீது பல்வேறு தடைகளையும் விதிப்பதால் சிங்கள அரசிற்கும் படைகளுக்கும் எதிராக போராடியபடிதான் நமது தொழிலாள மக்கள் தமது அன்றாட உழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களின் வாழ்வை மதிப்பிடுகையில் நமது தேசத்தில் நிலவிடும் சமூக அடக்குமுறைகளான சாதிய, ஆணாதிக்க, பிரதேச அடக்குமுறைகள் தொழில்களின் மீது தமது பன்முக ஆதிக்கத்தை நிறுவியிருப்பதை நாம் உரிய கவனத்திற்கு எடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்வடக்குமுறைகளின் விளைவான தொழில் ரீதியான இழிவுபடுத்தல்கள், தொழிற்பிரிவினைகள், உழைப்புச் சுரண்டல் ஆகியவற்றிற்கெதிராக காலங்காலமாக போராடியபடிதான் தொழிலாள மக்கள் தேசத்தை நிர்மாணித்து வருகின்றனர். தொழிலாளர்களின் முழுமையான விடுதலை என்பது இப்பன்முக சமூக அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலைப் பெறுவதையும் இணைத்துள்ளது.

விடுதலைப் போராட்டத்திற்கு தம்மத்தியிலிருந்து இளம் தலைமுறையினரை வழங்கியும், தாமே மக்கள் படைகளில் நேரடியாக பங்கேற்றும், போராட்ட நடவடிக்கைகளுக்கு அவசியமான அனைத்துவகை உழைப்பையும் தார்மீக ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றார்கள் தமிழீழ தொழிலாளர்கள்.

தமிழீழ அரசு தொழிலாளரின் நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாக அமைய வேண்டுமாயின் விடுதலைப் போராட்டத்தில் தொழிலாள மக்கள் தற்போதிருந்தே தமது ஆளுமையை பிரக்ஞைபூர்வமாக நிறுவிட வேண்டும். இதற்காக, தமது அன்றாட நலன்களின் அடிப்படையில் தாம்சார் தொழில் ரீதியாக அமைப்பாவதுடன், தமிழீழத்தின் தொழிலாளர் தமது நீண்டகால நலனுக்காக தேசம் தழுவிய அளவிலும் அமைப்பாக வேண்டியவர்களாயுள்ளனர்.

தேசத்தின் விடுதலைக்கு தம்மையே உரமாக்கிடும் சகல மக்கள் பிரிவினர்களின் நலன்களை அத்திவாரமாய்க் கொண்டுதான் தமிழீழ ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட வேண்டும். தமிழீழத்தின் பொருளாதாரக் கொள்கையானது அதன் அடிப்படையில் **அனைவருக்கும் வேலை, நியாயமான ஊதியம்** என்பதை தனது செயல் முழக்கமாய்க் கொள்ள வேண்டும். முதலாளித்துவ முறைமையினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள தொழிலாளருக்கிடையிலான பிளவுகளை இல்லாதொழிப்பதை குறிக்கோளாகக் கொள்வதோடு, தேசத்தின் அபிவிருத்திக்கு அவசியமான தொழில்கள் அனைத்தும் இயற்கையோடு இயைந்த நவீனத்துவ வழியில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடும் புரட்சிகரமான தொழிற்சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

புரட்சிகர அக்கினிப் பிளம்புகளாக போராட்ட சக்திகள் தொழிலாளர் மத்தியில் கருக்கொள்ள வேண்டும். அத்தீயில் நம் தேசம் வெந்து சிவந்திடும். தமிழீழத்தின் வரலாறு இவ்வாறே படைக்கப்பட வேண்டும்.


★அங்கவை

## தமிழக... (8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ளுக்காக ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டணிகள் அதிர்ச்சி தருவனவாயுள்ளன. ஈழப் போராட்டத்திற்காக தீவிரமாக குரல்கொடுப்பதனால் எப்பொழுதும் குற்றச்சாட்டிற்கு உள்ளாகிடும் கட்சிகள், தம்மை "பயங்கரவாத ஆதரவாளர்களாக" குற்றம் சாட்டிவந்த ஈழப் போராட்டத்திற்கு முற்றிலும் எதிரான கட்சிகளுடன் கூட்டமைக்கின்றன. ஈழப் போராட்த்திற்கு ஆதரவளித்து வரும் ஒரே கூட்டணியில் அங்கம் வகித்த கட்சிகள் கூட்டணியிலிருந்து சிதறிப் பிரிவடைகின்றன.

இந்நிகழ்வுகள் ஈழத்தமிழரிடையே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவ்வரசியல் சக்திகள் நமக்காக தொடர்ந்தும் குரல்கொடுப்பார்களா? இவர்கள் போராட்ட ஆதரவைக் கைவிட்டால் நமக்காக தமிழகத்தில் யார்தான் உள்ளனர் எனும் கேள்வியும் நம் தேசத்தில் எழுந்துள்ளது.

தமிழகத்தில் பிரதான நீரோட்டத்திலான அரசியலில் ஈடுபட்டுவரும் சக்திகளின் ஈழப் போராட்ட ஆதரவு என்பது, அவர்களின் சொந்த அரசியல் நலன்களுக்கு உட்பட்டதே. ஒரு காலத்தில் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவளித்து வந்த கட்சிகளும் தனிநபர்களும் தற்போது முற்றிலும் போராட்டத்தின் எதிர்ப்பாளர்களாக மாறியுள்ளனர். இதனை ஒரு தொடர் நிகழ்வாக அவதானிக்க முடிகிறது.



அவ்வகையில், தமிழகத்தில் ஈழப்போராட்டத்தின் நிரந்தர ஆதரவாளர்களாக இருக்கப் போகும் நம்பகமான பிரிவினர் வெகுஜனத்தளத்தில் செயற்படுபவர்களும், புரட்சிகர சக்திகளும் , பரந்துபட்ட தமிழக மக்களுமே.

இவ்வெகுஜன செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளையும், ஜனநாயக, முற்போக்கு சக்திகளின் செயற்பாடுகளையும் இந்திய மற்றும் தமிழக அரசுகள் திட்டமிட்டு கட்டுப்படுத்தி வருகின்றன. தமிழக மக்களை தமது பிற்போக்கு ஊடகங்களின் மூலமாக ஈழப் போராட்டத்திற்கு எதிரான சித்தாந்தத்திற்கு உள்ளாக்கி வருகின்றன. வன்முறை இயந்திரத்தைக் காட்டி அச்சுறுத்துகின்றன. எனினும் இந்திய மற்றும் தமிழக அரசுகளின் அடக்குமுறை போக்குகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு வரும் தமிழக மக்கள், ஈழத்தில் தமது சகோதரங்கள் சிங்கள இனவெறி அரசிற்கெதிராக போராடி வருவதையும், அதை தம்மை அடக்கும் அரசுகள் கூட்டிணைந்து ஆதரித்து வருவதையும் அறிந்துகொள்ள முடியாதவர்களாயில்லை.

தேசமாக நமது உறவுகளை நம்பகத்தன்மையும் போர்க்குணாம்சமும் உள்ள இவர்களுடன் நாம் கட்டியெழுப்பிட வேண்டும். நமது போராட்டத்தின் நியாயத் தன்மைக்காகவும், ஆதிக்க சக்திகளின் சித்தாந்த பிரச்சாரங்களை முறியடித்திடவும் தொடர்ச்சியாக தமிழக மக்கள் மத்தியில் பிரச்சாரங்களில் ஈடுபட வேண்டும். இதன் மூலம் தமிழீழ விடுதலைக்கான நிரந்தர ஆதரவுக்கான அடித்தளத்தை உருவாக்கிட வேண்டும்.

நமது நீண்டகால உறுதியான ஆதரவுசக்திகள் அரசியல் கட்சிகள் அல்ல, தமிழக மக்களும், புரட்சிகர சக்திகளும், வெகுஜன செயற்பாட்டாளர்களுமே என்பதில் நாம் உறுதியாயிருப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

நிரந்தர விடுதலைக்காக போராடுவோம்!

'The Editor'
BM Box 4002
London. WC IN
3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

**வெ**ற்றிகள் நோக்கி நம் தேசம் முன்னேற, விடுதலை வெள்ளி நம் வானில் தோன்ற, இத் தமிழ் புத்தாண்டில் எமது வாழ்த்துகளை தங்களுடன் பரிமாறிக் கொள்கிறோம்.

நம்மை தேசமாக துவம்சம் செய்து தனது ஆக்கிரமிப்பின் அவமானக் கொடியை நம்மீது நாட்டிய பின்னர், சர்வதேச சமூகத்தை திருப்திபடுத்துவதற்காக தனது நலனில் நின்று நமது தேசத்தோடு பேச்சுவார்த்தைகளை நடாத்தலாமென சிங்கள அரசு முயற்சித்து வந்தது. இன்றும் அதன் நோக்கம் அதுவே. எனினும் சர்வதேச அழுத்தங்களின் காரணமாகவும், யுத்தத்தை மேற்கொண்டு நடாத்திட முடியாத இராணுவ மற்றும் பொருளாதார காரணங்களாலும் தனது ஆக்கிரமிப்புக்கு துணைநிற்கும் ஏகாதிபத்திய, பிராந்திய கூட்டாளிகளின் ஆசியுடன் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவது போல் பாவனை காட்டுகின்றது.

பேச்சுவார்த்தை சார்ந்து உண்மையான திட்டங்கள் ஏதும் அரசிடம் கிடையாது என்பது அம்பலமாகிவிட்டது. பேச்சுவார்த்தை எனும் போர்வைக்குள் நம்மை தேசமாக அழித்தொழிப்பதற்கான கொடிய ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறது. எதிரியின் இந்த கொடிய ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதற்கு நாமும் தேசமாக அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் முழுஅளவில் தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டும். அடுத்தகட்ட யுத்தம் ஆரம்பிக்கப்படுகையில் ஏகாதிபத்திய மற்றும் இந்திய ஆதிக்க சக்திகள் நம்மை பலவீனப்படுத்தி நமது வெற்றிகரமான எழுச்சியை முடமாக்கிடும் வகையில் நம்மீது பல்வேறு வழிகளிலும் அழுத்தங்களை மேற்கொள்ளும். இவையாவற்றையும் எதிர்கொண்டு முன்னேறும் வகையில் நாம் தேசமாக நம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு திடம்பெற வேண்டும். இதற்காக நம்மத்தியிலான அனைத்து சக்திகளும் இணைக்கப்பட்டு தேசம் உருக்குறுதி பெற வேண்டும்.

புரிந்துணர்வுடன்படிக்கை கைச்சாத்திடப்படுமானால், அரசியல் தீர்வொன்றை நோக்கிய பேச்சுவார்த்தைகள் முன்னோக்கி நகரலாம் அல்லது சிங்கள அரசின் கபடத் தனங்களால் இடையிலேயே முறியலாம். எதுவாயினும், நமது விடுதலையை இலக்காகக் கொண்டு தற்போது நாம் எதிர்கொண்டுள்ள இப்பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை நமது தேசத்தின் நலனில் நின்று அணுகுவோம்.

பேச்சுவார்த்தைகளுக்கான சூழலை உருவாக்குவதற்கு கீழ்வரும் உறுதிப்பாடுகளும் நடைபெற வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்:

1. தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் குறிப்பிட்ட தவணைக்குள் விடுவிக்கப்பட வேண்டும்.
2. நமது மக்கள் சுதந்திரமாக, வெகுஜனப் போராட்டங்களை நடாத்துவதற்கான சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
3. தமிழீழ மக்கள் தமது கடல், நிலங்களில் தொழில் செய்வதற்கான சூழல் உடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
4. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழப் பிரதேசங்களிலும் சிறிலங்காவிலும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்தப்படும் படுகொலைகள், கைதுகள்,வன்புணர்ச்சி சித்திரவதைகள் முற்றாக நிறுத்தப்படல் வேண்டும்.

## பெண்கள் மீதான சித்திரவதைகளை போராடி முறியடிப்போம்!

தமிழ்ப் பெண்களின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி தமிழீழத் தாயகத்தையே சிறைக் கூடமாக மாற்றியிருக்கும் சிங்களப் படைகள் மன்னாரில் இரு தமிழ்ப் பெண்களை கைது செய்து சிறைநிலைகூட்டு வன்புணர்ச்சிக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாகியிருப்பதைதை இப்பெண்கள் தாமே துணிகரமாக வெளிப்படுத்தி குற்றவாளிகளை அம்பலப்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்ப் பெண்களை தன்னிச்சையாகக் கைது செய்து அவமானப்படுத்தும் வகையிலும் உச்சபட்ச வதைகளை, தண்டனைகளை விதிக்கும் வகையிலும் பாலியல் சித்திரவதைகளை சிங்களப்படைகள் மேற்கொண்டு வருகின்றன. நீர்கொழும்பு பொலிசினால் நம்தேசத்து பெண் ஒருவர் தன்மீது இழைக்கப்பட்ட மிருகத்தனமான சித்திரவதைகள் குறித்து நீதிமன்றத்தில் வெளிப்படுத்தி குற்றவாளிகளை அம்பலப்படுத்தியுள்ளார்.

தமிழ்பெண்கள் மீது இழைக்கப்படும் சித்திரவதைகள் நம்தேசத்தை கோபாவேசத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட நமது பெண்களின் உரிமைகளுக்காகவும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காகவும் தேசமாகத் திரண்டு போராடுவோம். **இனவெறிப் படைகளை நம்மண்ணிலிருந்து முற்றாக துடைத்தெறிந்து நமது பெண்களின் உடல் உயிர் பாதுகாப்பை உறுதிபடுத்துவோம்.**

நமது மண்ணை அத்துமீறி ஆக்கிரமித்த இந்தியப் படைகள் தமிழீழத்தின் தமிழ், முஸ்லிம் பெண்கள் மீது இழைத்த குரூரமான சித்திரவதைகளுக்கு முடிவுகட்டவும், தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவித்து வந்த அடக்குமுறைகளிலிருந்து மக்களது சுதந்திரத்தை மீட்கவும் தனது முதிர்ந்த வயதிலும் துணிகரமாக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த அன்னை பூபதி அவர்களை அந்நாரின் இந்நினைவு மாதத்தில் தேசமாக நினைவு கூர்வோம்.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

## தமிழக அரசியலில் தமிழீழ ஆதரவலைகள்



தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காகவும் குரல்கொடுத்து வருபவர்களை நாம் மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

ஒரு பிரிவினர் வெகுஜன தளத்தில் செயற்படும் ஈழப்போராட்ட ஆதரவாளர்கள். மற்றைய பிரிவினர் தமிழக அரசியலில் தாக்கம் செலுத்திடும் பிரதான நீரோட்டத்திலான அரசியல் கட்சிகள் சார்ந்தவர்கள். மற்றொரு பிரிவினர், அடக்கபட்ட தேசங்களின் விடுதலைக்காக குரல்கொடுப்பதை தமது தாபனக் கொள்கையாக கொண்டிருக்கும் புரட்சிகர, முற்போக்கு சக்திகள்.

இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் கூட செல்வாக்கு செலுத்திடும் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவான இவ்வரசியல் கட்சிகளினதும் தலைவர்களினதும் மீது தமிழீழ போராட்ட சக்திகளும், ஈழத்தமிழர்களும் நம்பிக்கை கொண்டிருப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

நடக்கவுள்ள தமிழக தேர்தல் நிலவரங்களை அவதானிக்கையில், தமிழீழ ஆதரவு அரசியல் கட்சிகள் தமது அரசியல் நலன்க-

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்